வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-மலர்விழி

தேதி-29.8.2024 நேரம். மாலை 6.10 மணி

---------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

இன்று தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மகளிர் நலனை மேம்படுத்த, கடந்த 10 ஆண்டுகளில், முன் எப்போதும் இல்லாத அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் கூறி உள்ளார்.

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில், **40 நிமிடங்களுக்கு ஒன்று** என்ற அளவில் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் தொடக்கப்பட்டுள்ளதாக மத்திய இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று காரைக்கால் மாவட்டத்திற்கான வளர்ச்சித் திட்டங்கள் குறித்து, காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

விளையாட்டு தினம்

இன்று தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார். இளைஞர்கள் பலரும் விளையாட்டு துறையில் ஈடுபட்டு ஜொலிக்க ஏதுவாக, எல்லா வகையான விளையாட்டுக்களையும் ஆதரிக்க, அரசு உறுதி பூண்டுள்ளதாக வாழ்த்துச் செய்தியில் அவர் கூறி உள்ளார். புகழ்பெற்ற ஹாக்கி வீரர் தியான் சந்த் பிறந்த நாளான இன்று நாடு அன்னாருக்கு புகழாரம் சூட்டுவதாகவும், இந்தியாவிற்காக விளையாடியவர்கள், மற்றும், விளையாட்டுத் துறையில் ஆர்வம் உள்ள அனைவரையும் போற்ற வேண்டிய தருணம் இது என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேஜர் தியான் சந்த் பிறந்த நாள் தேசிய விளையாட்டு தினமாக கொண்டாடப்படுவதை ஒட்டி, புதுடெல்லியில், தியான் சந்த் விளையாட்டு அரங்கில் உள்ள அன்னாரின் சிலைக்கு, மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். சாலை போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் திரு நிதின்கட்கரி உள்ளிட்டவர்களும், தியான் சந்த் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

மோடி-லட்சாதிபதி

மகளிர் நலனை மேம்படுத்தவும், பெண்களை வளப் படுத்தவும் கடந்த 10 ஆண்டுகளில், முன் எப்போதும் இல்லாத அளவில் நடவடிக்கை

எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறி உள்ளார். மகளிர் நலன் தொடர்பாக, சமூக ஊடகத்தில் மத்திய வேளாண் அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான் வெளியிட்டுள்ள பதிவிற்கான பதிலில் பிரதமர் இவ்வாறு கூறி உள்ளார். கல்வி, சமூகப் பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியில், பெண்களின் அதிகாரப் பங்கேற்பை, அரசு உறுதிப்படுத்தி இருப்பதாகவும், இதனால் இந்தியப் பெண்கள் தொடர்ந்து முன்னேற முடியும் என்றும் அவர் கூறி உள்ளார்.

மோடி- கூட்டம்

பாரதீய ஜனதா கட்சியின் மத்திய தேர்தல் கமிட்டிக் கூட்டம். புதுடெல்லியில் இன்று மாலை நடைபெறுகிறது. பிரதமர் திரு நரேந்திர மோடி, பிஜேபி தலைவர் திரு ஜேபி நட்டா, மற்றும், கட்சியின் மூத்த தலைவர்கள் இதில் பங்கேற்கிறார்கள். அரியானா சட்டமன்ற தேர்தலுக்கான பிஜேபி வேட்பாளர்களின் பெயர்கள், இக்கூட்டத்தில் இறுதி செய்யப்படும் என எதிர்பார்க்கப் படுகிறது. இதுதொடர்பாக பாரதிய ஜனதா கட்சியின் அரியானா மையக் குழுக் கூட்டமும், புதுடெல்லியில் இன்று நடைபெற்றது. கட்சித் தலைவர் திரு ஜேபி நட்டா, மத்திய அமைச்சர்கள், திரு அமித் ஷா, திரு தர்மேந்திர பிரதான் உள்ளிட்டோர் இதில் கலந்து கொண்டனர்.

*ஜம்மு-காஷ்மீர்*

ஜம்மு-காஷ்மீரில் 2-ஆம் கட்ட சட்டமன்ற தேர்தலுக்கான தேர்தல் அறிவிக்கை இன்று வெளியிடப்பட்டு, வேட்புமனு தாக்கல் தொடங்கி உள்ளது. ஸ்ரீநகர், பூஞ்ச், ரியாஸி, ராஜோரி உள்ளிட்ட 6 மாவட்டங்களைச் சேர்ந்த 26 சட்டமன்ற தொகுதிகளில், இந்த 2-ஆம் கட்ட தேர்தல் செப்டம்பர் 25-ஆம் தேதி நடைபெற உள்ளது. இதற்கான வேட்பு மனுக்களை தாக்கல் செய்ய, செப்டம்பர் 5-ஆம் தேதி கடைசி நாளாக இருக்கும் என்றும், மறுநாள் 6-ஆம் தேதி, வேட்பு மனு பரிசீலனை நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜம்மு-காஷ்மீரில் மொத்தம் உள்ள 90 சட்டமன்ற தொகுதிகளில், 24 தொகுதிகளுக்கு, செம்டம்பர் 18-ஆம் தேதி நடைபெற உள்ள முதல் கட்ட தேர்தலில், ஏற்கப்பட்ட வேட்பு மனுக்களை விலக்கிக் கொள்ள நாளை கடைசி நாளாகும்.

*ஏக் பேட்*

மத்திய வேளாண் அமைச்சர் திரு ஷிவ்ராஜ் சிங் சவ்கான், **தாயின் பெயரில் ஒரு மரம் இயக்கத்**தின் கீழ் இன்று புதுடெல்லியில் உள்ள **இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழக வளாகத்**தில் மரக் கன்றுகளை நட்டு வைத்தார். அமைச்சகத்தின் கீழ் செயல்படும் 800 அமைப்புகள், இந்த இயக்கத்தில் பங்கேற்று, மொத்தம் 4 ஆயிரம் மரக் கன்றுகளை நடுவதாக, அவர் தெரிவித்தார். அமைச்சகத்தின் சார்பில் 1 ஏக்கர் நிலப் பரப்பில், **மாத்ரு வனம்** நிறுவப்படும் என்றும் அவர் கூறினார். **தாயின் பெயரில் ஒரு மரம்**

இயக்கத்தின் கீழ், நாடு முழுவதும் அடுத்த மாதத்திற்குள், 80 கோடி மரக் கன்றுகளை நடவும், அடுத்த ஆண்டு மார்ச் மாதத்திற்குள் இந்த எண்ணிக்கையை, 140 கோடியாக உயர்த்தவும், மத்திய அரசு, இலக்கு நிர்ணயித்துள்ளது.

*ஜிதின் பிரசாதா*

மத்திய தகவல்-தொழில் நுட்பத் துறை இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா, இன்று புதுடெல்லியில், டிஜிட்டல் **பாரத் பொருளாதார** மாநாட்டில் உரையாற்றினார். இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில், **40 நிமிடங்களுக்கு ஒன்று** என்ற அளவில் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் தொடக்கப்பட்டுள்ளதாகவும், ஸ்டார்ட்-அப் நிறுவனங்களின் **மகா கும்ப**மாகவே, இந்தியா திகழ்வதாகவும் அவர் கூறினார். நாட்டில் தற்போதுள்ள 1 லட்சத்து 40 ஆயிரம் ஸ்டார்ட் அப் நிறுவனங்களில் சுமார் 45 சதவிகிதம், பெண்கள் தலைமையில் செயல்படுவதாக, அவர் தெரிவித்தார். மத்திய பட்ஜெட்டில் செயற்கை நுண்ணறிவு இயக்கத்திற்கு, 10 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார். **செயற்கை நுண்ணறிவுத் தொழில் நுட்ப**ங்களை இந்தியாவில் உருவாக்கி, இந்தியாவிற்கு பயன்படச் செய்வதே அரசின் நோக்கம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

*கீர்த்தி வர்தன்-*

மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை இணை அமைச்சர் திரு கீர்த்தி வர்தன் சிங், இன்று புதுடெல்லியில், **அசோச்சேம்** சுற்றுச்சூழல் மற்றும் கார்பன் மாநாட்டை தொடக்கி வைத்தார். இந்தியாவின் நிகர கார்பன் புகை வெளியீட்டை, **2070-ஆம் ஆண்டிற்குள், பூஜ்யமாக குறைக்கும் இலக்கை எட்டுவதற்கேற்ற ஒத்துழைப்புச் சூழல் ஒன்றை உருவாக்குதல்** என்ற மையக் கருத்து அடிப்படையில் இம்மாநாடு நடத்தப்பட்டது. மாநாட்டில் அமைச்சர் பேசுகையில் உலக பிரச்சனைகளான சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் பருவநிலை மாற்றத்தின் தாக்கங்களில் இருந்து இந்தியாவை பாதுகாக்க, பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசு, பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக தெரிவித்தார். ஜல்ஜீவன் இயக்கத்தினால் நாட்டின் ஊரகப் பகுதிகளில் **நீர்ப் பற்றாக்குறை** நீக்கப்பட்டதைத் தொடர்ந்து, குறிப்பாக விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்திருப்பதாகவும், சுற்றுச்சூழல் பிரச்சனைகளை தீர்ப்பதில். தொழில் துறையினர் மற்றும் சம்பந்தப்பட்ட இதர தரப்பினர் அனைவருக்கும், எல்லா உதவிகளையும், அரசு வழங்கும் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

*கைலாசநாதன்*

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று காரைக்கால் மாவட்டத்திற்கான வளர்ச்சித் திட்டங்கள் குறித்து,

காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஆய்வுக் கூட்டம் நடத்தினார். காரைக்காலில் உள்கட்டமைப்பு மற்றும் சுற்றுலா வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்றும், சனீஸ்வர பகவான் கோவில் குறித்து அனைவரும் அறியும் வகையில் எடுத்துக் கூற வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். வாய்க்கால்கள் மற்றும் நீர் வழிப் பாதைகளை மழைக்காலத்திற்கு முன்பாகவே தூர்வார அவர் அறிவுறுத்தினார்.

காரைக்கால் துறைமுகத்தை வைத்தே, காரைக்கால் மாவட்டத்தையும் புதுச்சேரி மாநிலத்தின் பொருளாதாரத்தையும் வலுப்படுத்த முடியும் என்பதால், அதிகாரிகள், தொலைநோக்கு பார்வையுடன், இதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென திரு கைலாஷ்நாதன் கேட்டுக் கொண்டார். அரசு ஊழியர்கள், அரசுப் பணியை அதிகாரத்திற்கான வாய்ப்பாக அன்றி, மக்கள் சேவைக்கான வாய்ப்பாக எடுத்துக் கொண்டு, மக்களின் நன்மைக்கான அரசின் திட்டங்களை அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினார்.

காரைக்காலில் **மாவட்ட ஆட்சியர் புகார் தளம்** செயல்படுத்தப் படுவதையும், **மக்களைத் தேடி மாவட்ட ஆட்சியர்** திட்டம் தொடக்கப்பட்டு

இருப்பதையும் அவர் பாராட்டினார். நிர்வாக செயல்பாட்டில் தொழில் நுட்பங்கள் முக்கிய பங்காற்ற முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த மறுஆய்வுக் கூட்டத்தில், குடிமைப் பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு திருமுருகன், காரைக்கால் மாவட்ட ஆட்சியர் டாக்டர் மணிகண்டன, துணை நிலை ஆளுநரின் செயலர் திரு நெடுஞ்செழியன், முதுநிலை காவல் துறை கண்காணிப்பாளர் திரு மணீஷ், மற்றும், பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர். காரைக்கால் மாவட்டத்தில் அமலாகி வரும் மத்திய- மாநில வளர்ச்சி திட்டப் பணிகள் மற்றும் மக்கள் நலப் பணிகள் குறித்து, மாவட்ட ஆட்சியர் திரு மணிகண்டன் இக்கூட்டத்தில் காணொளி காட்சி மூலம் விவரித்தார் மாவட்டத்தின் சட்டம்-ஒழுங்கு நிலை குறித்து முதுநிலை காவல்துறை கண்காணிப்பாளர். திரு மணீஷ் எடுத்துக் கூறினார்.

மறுஆய்வுக் கூட்டத்தை தொடர்ந்து துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், **காரைக்கால் மீன்பிடி துறைமுகத்**திற்கு நேரில் சென்று மீனவர்களின் பிரச்சனைகளைக் கேட்டறிந்தார். படகு கட்டுமானப் பகுதி, மற்றும், **மீன் ஏல** மையத்தையும் அவர் பார்வையிட்டார். தொடர்ந்து **பறவைப்பேட்**டில் உள்ள குப்பைக் கிடங்கை துணை நிலை ஆளுநர் பார்வையிட்டு, குப்பைகளை தரம் பிரிக்கும் முறை மற்றும் உரம்

தயாரிக்கும் முறை குறித்து கேட்டறிந்தார். அதனைத் தொடர்ந்து **அரசலாறு கடற்கரை** மற்றும் **காரைக்கால் துறைமுக**த்தை துணை நிலை ஆளுநர் பார்வையிட்டார். துறைமுகத்தின் செயல்பாடுகள் மற்றும் சரக்குகளை கையாளும் திறன் குறித்து அவர் கேட்டறிந்தார். முன்னதாக, திருநள்ளாறில் அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு கட்டிடம் கட்டும் பணிகளையும் துணை நிலை ஆளுநர் பார்வையிட்டு பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

*கால்நடை மருத்துவம்*

புதுச்சேரியில், ராஜீவ்காந்தி கால்நடை மருத்துவ கல்வி மற்றும் ஆராய்ச்சி நிறுவனத்தின் மறுவுருவாக்க ஆராய்ச்சி மையம், மற்றும், சிகிச்சை வளாகத் திறப்பு விழா, இன்று நடைபெற்றது. சட்டப்பேரவைத் தலைவர் திரு ஆர் செல்வம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, ஆராய்ச்சி மையத்தையும், சிகிச்சை வளாகத்தையும் திறந்து வைத்தார். வேளாண் அமைச்சர் திரு ஜெயக்குமார், விழாவிற்கு தலைமையேற்று, கல்வெட்டு பலகையை திறந்து வைத்தார். தலைமைச் செயலர் திரு சரத் சவ்கான், கால்நடை பராமரிப்புத் துறைச் செயலர் திரு எம் ராஜு, துறையின் இயக்குநர் டாக்டர் லதா மங்கேஷ்கர், ராஜீவ்காந்தி கால்நடை மருத்துவக் கல்லூரியின் புல முதல்வர் டாக்டர் செழியன் உட்பட பலர், இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

*வானிலை*

மத்திய வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய வடக்கு வங்க கடலில் இன்று காலை காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகி உள்ளது. இது, மேற்கு-வடமேற்கு திசையில் நகர்ந்து, நாளை, மத்திய மேற்கு வங்க கடல் மற்றும் அதனை ஒட்டிய பகுதிகளில், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக நிலவக் கூடும் என்றும், அதற்கடுத்த 2 நாட்களில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று, வடக்கு ஆந்திரா மற்றும் தெற்கு ஒடிசா கரையை நோக்கி நகரக் கூடும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது. செப்டம்பர் 4-ஆம் தேதி வரை, தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும், லேசானது முதல் மிதமான மழை பெய்யக் கூடும் என்றும் மணிக்கு 30 முதல் 40 கிலோ மீட்டர் வேகத்தில் தரை காற்று வீசக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

*யுபிஎஸ்சி*

சிவில் சர்வீஸ் தேர்வில் பங்கேற்கும் தேர்வர்களின் அடையாளத்தை, அவர்களின் சொந்த விருப்பத்தின் பேரில், ஆதார் மூலம் சரிபார்க்க, யுபிஎஸ்சி-மத்திய பணியாளர் தேர்வாணையத்திற்கு, மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது. தேர்விற்கான பெயர்ப் பதிவின் போதோ, அல்லது, தேர்வு உள்ளிட்ட ஆள்சேர்ப்பு நடவடிக்கைகளின் இதர நிலைகளிலோ, ஆதார் மூலம் அடையாளத்தை சரிபார்த்துக் கொள்ளலாம் என்றும் அரசு

தெரிவித்துள்ளது. போலி ஆவணங்களின் அடிப்படையில், அனுமதிக்கப்பட்டதை விட அதிக முறை சிவில் சர்வீஸ் தேர்வு எழுதிய குற்றச் சாட்டின் பேரில், பயிற்சி ஐஏஎஸ் அதிகாரி பூஜா கேத்கரை, யுபிஎஸ்சி ஏற்கனவே தகுதி நீக்கம் செய்திருப்பதும் குறிப்பிடத் தக்கது.

மீண்டும் தலைப்புச் செய்திகள்

இன்று தேசிய விளையாட்டு தினத்தை ஒட்டி, பிரதமர் திரு நரேந்திர மோடி நாட்டு மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

மகளிர் நலனை மேம்படுத்த, கடந்த 10 ஆண்டுகளில், முன் எப்போதும் இல்லாத அளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பிரதமர் கூறி உள்ளார்.

இந்தியாவில் கடந்த 10 ஆண்டுகளில், **40 நிமிடங்களுக்கு ஒன்று** என்ற அளவில் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் தொடக்கப்பட்டுள்ளதாக மத்திய இணை அமைச்சர் திரு ஜிதின் பிரசாதா தெரிவித்துள்ளார்.

புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் இன்று காரைக்கால் மாவட்டத்திற்கான வளர்ச்சித் திட்டங்கள் குறித்து, காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஆய்வுக் கூட்டம் நடத்தினார்.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது.

Puducherry/Reg.Bulletin/Tamil/18.10hrs/29.8.2024/Script.